# ஆலய குருக்களும் 13 தமிழரும் கடத்தப்பட்டனர்
# மகாஓயா பௌத்த பிக்கு கடத்தல் எதிரொலி

(அம்பாறை)

மகா ஓயா பகுதியிலுள்ள தமிழ்க் கிராமமொன்றிலிருந்து ஆலயக் குருக்கள் ஒருவரும், மற்றும் பதின்மூன்று தமிழர்களும் ஆயுதம் தாங்கிய கோஷ்டியொன்றினால் நேற்று முன்தினமிரவு கடத்திச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் பௌத்தபிக்கு ஒருவர் நேற்று முன்தினம் கடத்தப்பட்டதற்குப் பழி வாங்கும் செயலாக இச் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரியவந்துள்ளது. கடத்தப்பட்ட பௌத்த பிக்குவை குறிப்பிட்ட நேரத்துக்குள் விடுதலை செய்யுமாறு கோரியுள்ள ஒரு குழு, அதற்காகப் பணயக் கைதிகளாக ஆலயக் குருக்களையும், மற்றும் பதின்மூன்று தமிழர்களையும் வைத்திருப்பதாக கூறப்படுகின்றது. கடத்தப்பட்ட ஆலயக் குருக்கள் புல்லுமலையிலுள்ள இந்துக் கோவிலொன்றில் பூஜை செய்பவரென்று தெரிகின்றது.

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 27 11-85 புதன் (கார்த்திகை 12 ரபியு அவ் 14) முழக்கம் 292

★ இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு: தொண்டமான் கருத்து

# வடகிழக்கு இணைந்த அமைப்பு இந்தியா நினைத்தால் முடியும்!

## தமிழ்க் குழுக்கள் இணைந்தால், தமிழகம் தொடர்ந்து நெருக்கினால் இது சாத்தியம்'

(எஸ். எஸ். ரி)

"இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமானல் வடக்கும் கிழக்கும் இணைந்ததான ஒரு அமைப்பு தமிழருக்கு வழங்கப்பட வேண்டும். இந்திய அரசு நினைத்தால் இது முடியும்" என்று அமைச்சர் தொண்டமான் நேற்றிரவு 'ஈழமுரசு'க்கு அளித்த சிறப்புப் பேட்டியொன்றில் தெரிவித்தார்.

"இலங்கை அரசாங்கம் தற்போதுள்ள நிலையில் மாகாண சபைக்கு மேல் எதனையும் வழங்காது. வடக்கும் கிழக்கும் இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன ஏற்கனவே தெரிவித்து விட்டார்" என்றும் சுட்டிக்காட்டிய அமைச்சர் தொண்டமான், "என்ன வாகத்தானிருந்தாலும் இந்தியா நினைத்தால் தமிழர் பிரதேசத்துக்கு ஒரு அமைப்பை பெற்றுக் கொடுப்பது முடியாத காரியமல்ல" என்றும் சொன்னர்.

ஜனாதிபதி தமிழர் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாமென

...6ம் பக்கம் பார்க்க

## இன்று அகதிகள் ஊர்வலம்

(வண்ணார்பண்ணை)

வவுனியா, திருமலை ஆகிய இடங்களிலிருந்து கலவரங்க

... 6ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியுடன் லலித்தும் புதுடில்லி செல்கின்றர்

(கொழும்பு)

டிசம்பர் மாதம் 9-ம் திகதி ஜனாதிபதி ஜெயவர்த்தன புதுடில்லி செல்லும் போது, தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியும் அங்கு செல்வார் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

டிசம்பர் 7ம், 8ம் திகதிகளில் பங்களாதேஷின் டாக்காவில் நடைபெறும் தெற்காசிய ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்து கொண்டபின்னர் ஜனாதிபதி இனப்பிரச்சினை விடயமாக பாரதப் பிரதமருடன் பேசுவதற்காக ஒன்பதாம் திகதி புதுடில்லி செல்கின்றர்.

அமைச்சர் அத்துலத்முதலி கொழும்பிலிருந்து நேரடியாகவே புதுடில்லி செல்வார்.

பாராளுமன்றத்தில் அனில் முனசிங்க கேள்வி:

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில்

## வாக்குப் பெட்டிகள் காணமல் போனதன் அறிக்கை எங்கே?

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல்களின் போது வாக்குப் பெட்டிகள் காணமற் போனது பற்றி தேர்தல் ஆணையாளர் இன்னமும் ஏன் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கவில்லையென்ற கேள்வியை திரு. அனில் முனசிங்ஹா எம் பி நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பினர்.

இச்சம்பவம் நடைபெற்று பல வருடங்கள் சென்று விட்டபோதிலும், இச் சம்பவம் தொடர்பான அறிக்கையொன்றை தேர்தல் ஆணையாளர் இன்னமும் சமர்ப்பிக்காதிருப்பது எதற்காக என்றும் அவர் கேட்டார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவரான திரு. அனில் முனசிங்ஹா, நேற்று பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது விவாதத்தில் கலந்து

—6ஆம் பக்கம் பார்க்க

## 4 கொழும்பு வர்த்தகர்கள் லொறியுடன் சுட்டுக்கொலை

கொழும்பிலிருந்து சென்ற நான்கு சிங்கள வர்த்தகர்கள் பொலனறுவை மாவட்டத்திலுள்ள மொரவேவா என்ற இடத்தில் வைத்து நேற்றுக் காலை இனம் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொள்ளைக் கோஷ்டியொன்று இதனைச் செய்திருக்கலாமென்று நம்பப்படுகின்றது.

நான்கு வர்த்தகர்களும் விற்பனை செய்வதற்கான பொருட்களுடன் லொறியொன்றில் சென்று கொண்டிருந்தபோது வழி மறிக்கப்பட்டதாகவும், அவர்கள் லொறியை நிறுத்

...6ஆம் பக்கம் பார்க்க

## புதிய உணவு முத்திரைகள் 10-ம் திகதிக்கு முன் கிடைக்கும்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னர் மாவட்டங்களுக்கான புதிய உணவு முத்திரைகள் யாழ். கச்சேரி ஊடாக அனுப்பி வைக்கப்படுகின்றன.

இந்தப் புதிய உணவு முத்திரைகள் இப்பகுதிகளில் அடுத்த மாதம் பத்தாம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டுவிடும் என உணவு திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார்.

அரசின் வறுமை நிவாரணச்

...6ம் பக்கம் பார்க்க

## அடையாள அட்டையை தொலைத்தவர்கள் பொலிஸில் புகார் செய்வது கட்டாயம்

வடபகுதியில் அடையாள அட்டையை தவறவிட்டவர்கள் புதியனவற்றை பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது தவறவிட்ட பொலிஸ் முறைப்பாடு பிரதியையும் இணைத்து அனுப்பவேண்டும் என ஆட்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ்வாறு சகல விபரங்களையும் பொலிஸ் முறைப்பாடு பிரதியையும் இணைத்து அனுப்பினல் மட்டுமே புதிய அடையாள அட்டையை பெறலாம்.

தற்போது வடக்கில் சில பொலிஸ் நிலையங்கள் இயங்காததினலும், அங்கு செல்ல சிலர் தயங்குவதால் பொலிஸ் முறைப்பாடு இன்றி பலர் விண்ணப்பிப்பதனல் அவர்களுக்கு புதிய அட்டை வழங்குவதில் சிரமமேற்படுவதாக அதிகாரியொருவர் தெரிவித்தார்

## ஈழமுரசு தொலைபேசி 'அவுட்' இன்று 18வது நாள்

ஈழமுரசு தொலைபேசி பழுதடைந்து இன்றுடன் பதி

...6ஆம பக்கம் பார்க்க

## குருமார்களின் கூட்டம்

கொழும்பு திருமண்டல அங்கலிக்கன் திருச்சபையின் குரு

... 6ஆம் பக்கம் பார்க்க

## மூன்று கப்பல்களில் வடக்கே உணவுப் பொருள் வருகிறது

வட பகுதிக்கு உணவுத் திணைக்களத்தினல் மூன்று உணவுக் கப்பல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் 'றுகுணு' என்ற கப்பலில் ஆயிரம் தொன் மாவும், நேற்று 'மதுரட்ட' என்ற கப்பலில் ஆயிரம் தொன் சீனியும் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தன.

அடுத்த வெள்ளிக்கிழமை 'நாகசாகி' என்ற கப்பலில்

—6ஆம் பக்கம் பார்க்க

விற்பனையிலும் வாசகர் தொகையிலும் முன்னணியில் ஈழமுரசு

## செய்தி அறிக்கை நேர மாற்றம்

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன காலை, இரவுத் தமிழ்ச் செய்தியறிக்கைகளின் நேரங்களில் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது. காலை ஆறு மணிக்கு ஒலிபரப்பாகும் செய்தியறிக்கை 6-30க்கும், இரவு 9-1க்கு ஒலிபரப்பாகும் இரவு நேர செய்தியறிக்கை 9-00 மணிக்கும் ஒலிபரப்பாகும். டிசம்பர் முதலாம் திகதியிலிருந்தே புதிய நேரம் நடைமுறைக்கு வருகின்றது.

சட்ட விரோத மின்சாரம்

## பொதுமக்கள் உணராவிடின் மரணங்களை தடுக்க முடியாது

(சுன்னுகம்)

"சுன்னுகம் பட்டணத்தில் உள்ள சகல மக்களும் ஒன்றுகச் சேர்ந்து "கள்ள மின்சாரம்" பெறுபவர்களுக்குஉண்மையை தெளிவுபடுத்தி அவர்களை மின்சாரத்தின் பெறுமதியை உணர வைக்காத வரை மின்வெட்டும், மின் ஒழுக்கு மரணங்களும் நிகழ்வதை தடுக்க முடியாது. பெறுமதிமிக்க உயிர்கள் மின்சார ஒழுக்குகளால் பலியாவதை தேசபக்தர்களாகிய எவரும் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியாது" என்று உடுவில் அரச அதிபர் திரு ஆ. மகாலிங்கம் குறிப்பிட்டார்.

சுன்னுகம் பட்டண சபை எல்லைக்குட்பட்ட மூன்றும் வட்டார பொதுமக்கள் சார்பில் உதவிஅரசஅதிபரை திரு. சபா. புஷ்பநாதன் தலைமையில் பேட்டிகண்டு தமது குறைகளையும் அதனை எவ்வாறு நிவர்த்தி செய்ய முடியும் எனவும் விளக்கிய குழுவுக்கு பதில் அளிக்கும் போது அரச அதிபர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

3ம் வட்டார மக்களுக்கு உள்ள குறைபாடுகள் அடங்கிய மகஜரை கையளித்து பேசுகையில் திரு. சபா. புஷ்பநாதன் குறிப்பிட்டதாவது சுமார் இருபத்தைந்து ஆண்டு காலமாக றேமன். கத்தோலிக்க பாடசாலையில் எவ்வித அபிவிருத்தி வேலைகளும் மேற்கொள்ளப்படாததை சுட்டிக் காட்டியதுடன் மேலும் மாணவர்கள் வசதியுடன் கல்வியை மேற்கொள்ள புதிய கட்டடமும்-மலசலகூட வசதிகளும் செய்து தரப்படவேண்டும் என்றார். சுன்னுகம் சந்தைக்குள் குவியும் குப்பைகள் அகற்றப்படாமல் இருப்பதையும்-ஒழுங்கைகள் குப்பையாக இருப்பதையும் சுட்டிக் காட்டினர். இதற்கு பதில் அளித்த சுன்னுகம் யாழ். அபி. சபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. இராமலிங்கம் ட்ரக்டர் பழுதானமையே இதற்குக் காரணம் எனவும் வண்டில்கள் மூலம் குப்பை அகற்றும் வேலைகள் துரிதமாக்கப்படவுள்ளன என்றார் மூன்றும் வட்டாரத்தில் மலசல கூடங்களை வீடுகளில் அமைப்போருக்கு இருநூற்றைம்பது ரூபா பண உதவியை தாம் செய்வதாக திரு. இராமலிங்கம் கூறினர்.

திரு. சபா. புஷ்பநாதன் தலைமையில் சென்ற குழுவில் திருவாளர்கள் வே ஞானரத்தினம்; செ. குலசிங்கம், வி. அருள்ஞானசுந்தரம், வி. மரியதாஸ், க. யோகலிங்கம் ஆகியோர் அங்கம் வகித்தனர். சுன்னுகம் சந்தையில் பல வருடகாலமாக வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு கடை வசதிகளைச் செய்து கொடுக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு உரிய நடவடிக்கையை தாம் மேற்கொள்வதாக திரு. இராமலிங்கம் உறுதி அளித்தார்.


# LONDON EXAMS.

May/June '86ல் நடக்கவிருக்கும் பரீட்சைக்கான **Week end Classes** பின்வரும் திகதிகளில் ஆரம்பமாகும்.

| | | | |
|---|---|---|---|
| ICMA | Section | A | 30.II 85 |
| | | B | 30 II 85 |
| | Part | I | 30.II.85 |
| IDPM | Part | I | 30 11 85 |
| IAA | Part | I | 30 II 85 |
| IAB | Foundation | | 30.II.85 |
| | Inter | | 14.12 85 |
| | Final | | 14 12.85 |

Note: Student registration with the London Institutes will be done by us.

**CANTABIA INSTITUTE**
(Shoot of Oxonia, Colombo)
21, MAIN STREET, JAFFNA.
Phone: 24201



## அழைப்பு

நவீல்ட் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலை
நத்தார் இசை ஆராதனையும்,
கலை நிகழ்ச்சியும்;
கண்காட்சியும் விற்பனையும்,
30.11.1985 காலை 9.30
அனைவரும் வருக.



# பெற்ற எசன்ஸ் சப்ளையேர்ஸ்
# PETTAH ESSENCE SUPPLIERS

பேக்கரி தயாரிப்புகள்,
பிஸ்கட், ரொபி, இனிப்பு, குளிர்பானம்,
ஐஸ்கிறீம், சிற்றுண்டி வகைகளுக்கான சகலவிதமான
எசன்ஸ், கலர்ப்பவுடர், கேக் தயாரிப்புக்குத் தேவையான
சகல பொருட்களுக்கும்

- ஊதுபத்தி
- சாம்பிராணி
- விளைவு சூடம்
- ரல்கம் பவுடர்
- வெள்ளை மஞ்சள் வசலின்
- வாசனைத்திரவிய எண்ணெய்
- ஓடிக்கொலோன்
- குளுக்கோஸ்

ஆகியவை தயாரிப்பதற்கான உற்பத்திப் பொருட்களும்
ஏனைய இதர

- பேப்பர் வகை
- பொக்ஸ்போட்
- காட்போட்
- ஆர்போட்
- நியூஸ்பேப்பர்
- ஒயில் பேப்பர்
- பிறவுண் பேப்பர்
- ரிசு பேப்பர்
- சலப்பின்

மற்றும் எல்லாவித பொலித்தீன் வகைகளுக்கும்
அச்சகங்கட்குத் தேவையான
சகல மை வகைகளுக்கும்

இன்றே எமது ஸ்தாபனத்திற்கு விஜயம் செய்து பாருங்கள்

223, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
223, Power House Road, Jaffna.


## இன்று ஆரம்பம்

(கொடிகாமம்)

இலங்கையில் புகழ் பெற்ற மிருசுவில் புனித நிக்கிலார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தினமும் மாலையில் நவநாள் ஆராதனைகள் இடம் பெறும்.

வேஸ்பர் ஆராதனைகள் டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி மாலையும், திருநாள் திருப்பலி, திருச்சொரூப சுற்றுப் பிரகாரம் என்பன டிசம்பர் ஆறும் திகதி காலையும், நடைபெறும். இம்முறை நவநாள் ஆராதனைகளை யாழ். தொடர்பகத்தைச் சேர்ந்த அருள்திரு. ஜெயசிங்கம் (அ. ம. தி.) அடிகளார் நடாத்துவார்.

இதற்கான ஏற்பாடுகளை மிருசுவில் பங்குத் தந்தை அருள் திரு. அமிர்தகுமார் அடிகளார் மேற்கொண்டுள்ளார்.

## பிறந்தநாள் வாழ்த்து



❋ புலோலி கிழக்கு தாமர் ஒழுங்கை இராமச்சந்திரன் இராதாமணி தம்பதியின் மகள் அமுதா இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ ஏழாலை வடக்கு பாலசுப்பிரமணியம் கலாநிதி தம்பதியின் மகள் ஜெறீனு தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ பருத்தித்துறை சிவானந்தராஜா ரதிகலா தம்பதியின் மகள் சிவரஞ்சினி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

❋ சாவகச்சேரி பத்மநாதன் கமலாதேவி தப்பதியின் மகன் கார்த்திக் இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ கச்சேரி நல்லூர் வீதி, சதாசிவம் பத்மாவதி தர்பதியின் மகள் விஜிதா இன்று தனது பன்னிரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ அளவெட்டி வடக்கு விஜயகுலசிங்கம் இரஞ்சிதமலர் தம்பதியின் மகன் விஜயரட்சகன் இன்று தனது ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்,

❋ பருத்தித்துறை வியாபாரி மூலை கந்ததாசன் மதிவதனி தம்பதியின் மகன் ரமணன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ யாழ். கச்சேரி நல்லூர் பாரதி வீதியைச் சேர்ந்த சபாரத்தினம், சந்திராதேவியின் மகன் கிரிசாந்தன் இன்று தனது ஒன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

செல்வராஜா வோல்டன் சுரேஸ்கரன் என்பவரின் அடையாள அட்டையை காணவில்லை. 580632092 V இதை கண்டெடுத்தவர்கள் 426, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

### தவறிவிட்டது

24-11-85 காலை 6.30 மணி அக்கராயன்குளம் - யாழ்ப்பாணம் இ. போ. ச. பஸ்ஸில், எனது ஓய்வூதிய அட்டை, வங்கிப் புத்தகம், அடையாள அட்டை, கைக்கடிகாரம் அடங்கிய ரவலிங் பாக் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவு செய்து கீழ்வரும் விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். நிக்கலஸ் ஆசீர்வாதம், உரும்பராய் கிழக்கு, உரும்பராய்.

### திட்டப்பரிசு பெறுபவர்

அங்கத்துவ நண்பர்களினுல் தெரிவுசெய்யப்பெற்று இம் மாதம் ரூபாய் ஓராயிரம் பரிசு பெறுபவர் M. குருசாமி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை. தினசரி வருவாய்கள், அதிர்ஷ்டம், ருதுசோபனம், திருமணம், பிரசவம் விபத்துக்கள், அந்தியகாலம் முதலியவற்றுக்குரிய ஏராளமான நன்கொடைகளும் கடன் வசதிகளும் ஒருங்கே அமைந்தது இத்திட்டம். விபரங்களுக்கு நேரில் வரவும் அல்லது முத்திரைக் கவருடன் விண்ணப்பிக்கவும். லக்கி பெனிபிட் கொம்பனி லிமிட்டட், பொதுச்சந்தை, கோப்பாய்.

### வெள்ள நிவாரணம்

வலிகாமம் தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 300 ரூபாவுக்கு குறைந்த வருமானமுள்ள 789 வறிய குடும்பத்தினர் வெள்ள நிவாரணம் பெற அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.


## அறிவித்தல்

ஈராக் பிரயாணத்திற்காக என்னிடம் கடவுச்சீட்டு தந்தவர்கள் அல்லது புதிதாக ஜெட்டா செல்ல விரும்புபவர்கள் இருந்தால் நேரில் என்னை சந்திக்கவும் மேல் விபரம் நேரில்.

A. மகேந்திரன்
155, குருசோவீதி, யாழ்ப்பாணம்.



## வெளிநாட்டு பிரயாணம்

கட்டாரிற்கு, மேசன், தச்சர், கூலியாட்கள் போன்றோரின் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். 30-11-85ற்கு முன் தொடர்பு கொள்ளவும்.

ஷாயி ஷீபாஸ் ஏஜென்சீஸ்
ஷாயி ஷீபா ஆத்ம ஆரோக்கிய நிலையம்,
48, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.
(வெள்ளிக்கிழமைகளில் மூடப்பட்டிருக்கும்)

ஈழமுரசு 27—11—85



# மாணவர் வளர்ச்சி முற்றிலும் ஆசிரியரைச் சார்ந்ததல்ல

(கல்வியங்காடு)

"மாணவர்கள் பாடசாலையில் இருக்கும் நேரத்தை விட வீட்டில் நிற்கும் நேரம் அதிகமானது. ஆசிரியர்களின் கண்காணிப்பில் அவர்கள் சிலமணி நேரமே இருக்கிறார்கள். மாணவர்களின் கல்வி முற்று முழுதாக ஆசிரியர்களின் கைகளிலேதான் உள்ளது என்ற நிலையை மாற்றி தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர்களும் பெரும் பங்கு கொண்டு பணியாற்ற வேண்டும். எமது பிள்ளைகளின் கல்வி ஒரு இக்கட்டான சூழ்நிலையில் நடைபெற்று வருகிறது. அரசின் உதவியை எதிர்பாராது எமக்கு வேண்டிய தேவைகளை நாமே நிறைவுசெய்துகொள்ள வேண்டும். எமது மாணவர்களின் கல்விச் செறிவு வியக்கத்தக்கதாகும்,"

இவ்வாறு கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றிய அதிபர் திரு. மா. முத்துக்குமாரு குறிப்பிட்டார். பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு ஆண்களும் பெண்களுமாகப் பெற்றோர் நிறைவாகக் கலந்து கொண்டனர்.

அதிபர் மேலும் உரையாற்றுகையில், தாம் இப்பாடசாலையின் பழைய மாணவன் என்றும், புதிய அதிபராக, இப்பாடசாலையில் பதவியேற்றமை குறித்துப் பெரிதும் மகிழ்வதாகவும், சகலரது ஒத்துழைப்பும் தமக்குக் கிடைக்கப் பெற்றால் இப் பாடசாலையை ஒரு சிறந்த நிலைக்குக் கொண்டுவர முடியும் எனவும் தெரிவித்தார்.

மூன்றாண்டுகளாக பாடசாலை அபிவிருத்தி சங்கம் கூட்டப்படாமைக்கு கூட்டத்தில் பலர் கண்டனம் தெரிவித்துக் கொண்டனர்.

பாடசாலையில் ஆறும் வகுப்பு ஆரம்பிப்பது பற்றியும், விளையாட்டு மைதானத்தின் தேவை பற்றியும் ஆராயப்பட்டது.

திரு. அ. செல்லத்துரை, திரு. சி. கந்தையா, ம. செல்வரத்தினம், க. நடராசா ஆகியோரும் உரையாற்றினர்.

பின்வருவோர் நடப்பாண்டுக்கான உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு. மா. முத்துக்குமாரு (அதிபர்), உப தலைவர்: திரு. அ. செல்லத்துரை, செயலாளர்கள்: திரு. ந. சுந்தரமூர்த்தி, திருமதி. பு. பரமநாதன் (ஆசிரியை), பொருளாளர் திரு. செ. யோகேஸ்வரன் (ஆசிரியர்), செயற்குழு உறுப்பினர்களாக அறுவர் தெரிவாகினர்.

## நாவல் வெளியீட்டு விழாவில் டானியல் வேதனை உரை:

# எமது இலக்கிய உலகில் திருட்டு, விபச்சாரம் அயோக்கியத்தனம் அதிகரித்துவருகின்றன

(இ. அரசகேசரி)

"பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் அதாவது லைசென்ஸ் பெற்றவர்கள் மட்டுமன்றிப் பெற்றுக் கொள்ளாதவர்களும் இலக்கியத்தில் 'பிறக்கதை' கதைக்கிறார்கள். எழுத்தாளர்கள் சமுதாயத்தில் உள்ள அநியாயங்களை உள்ளதை உள்ளபடி எழுத வேண்டும். ஆனால் பல எழுத்தாளர்கள் அவற்றையே செய்து வருவதால் எழுத முடியாமல் பின்னுக்கு நிற்கிறார்கள். கடந்த காலச் சமுதாய வரலாற்றை அறிய வேண்டும். அப்பொழுது தான் எதிர்காலச் சமுதாயத்தை அமைக்க முடியும். இலக்கிய உலகில் திருட்டுக்களும், விபச்சாரங்களும், அயோக்கியத்தனங்களும் அதிகரித்து வருகின்றது. பல எழுத்தாளர்கள் 'குதிரை ஓடி' பரிசு பெறுகின்றனர். இந்த அடவாடித்தனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்."

இவ்வாறு எழுத்தாளர் திரு. கே. டானியல் அவர்கள் தமது அடிமைகள் காவல் வெளியீட்டுவிழாவில் பதில் உரையாற்றும் பொழுது குறிப்பிட்டார். நல்லூர் சாதனா பாடசாலை மண்டபத்தில் கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள், மக்கள் கலை இலக்கிய பெருமன்றம், பூபாலசிங்கம் புத்தகசாலை நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்திய இவ் விழா திரு. க சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமையில் நடைபெற்றது. சொக்கன் தலைமையுரை ஆற்றும் பொழுது குறிப்பிட்டதாவது:-

"மக்களிடையே ஆழமாக ஊறிப்போன ஒரு பிரச்சினையை அடிப்படையாக வைத்துக் கொண்டு, அதன் வெளிப்பாடுகளை, தோற்றங்களை வரலாற்று ஆவணங்கள் போல் தெரிவிக்கும் பணியை திரு. டானியல் அவர்கள் செய்து வருகிறார். நடுத்தர எழுத்தாளர்கள் பயப்படும் விடயத்தை உண்மையான சம்பவங்களோடு எழுதுகிறார். இந் நாவலை வாசிக்கும் பொழுது ஒரு காலச் சமுதாய நிலையின் உணர்வுகளை இருண்ட பகுதிகளை நேரில் காண்பது போல இருக்கிறது. எனவே இந் நாவல் ஒரு விழிப்பு உணர்வை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை எனக்குண்டு" என்றார்:

பேராசிரியர் திரு. அ. சண்முகதாஸ் அவர்கள் கருத்துரை வழங்கும் போது குறிப்பிட்டதாவது:-

"சாதி அமைப்பு முறை முனைப்புப் பெற்று நிலவுவதற்கு மேலை நாட்டினரின் ஆட்சியும் காரணமாகும். நிருவாக வசதிக்காக உடையார், மணியகாரர் பதவிகளை உயர் சாதியினருக்கு அளித்தார்கள் இதனால் சாதி அமைப்புக் கூர்மைப்பட்டு புரையோடிய நிலையில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதை வேரோடு களைவது முக்கியமாக இளைஞர்களின் கடமையாகும். மனித பண்பாட்டியல் நாவல்களை திரு. கே. டானியல் மட்டுமே படைத்து வருகின்றார்" என்றார்.

எழுத்தாளர் சத்தியவடிவேல் அவர்கள் கருத்துரைவழங்கும்போது "டானியலுக்கு என்று ஓர் எழுத்து நடை உண்டு. இயல்பாகவே கருத்துக்களைத் தெரிவிக்கும் பேச்சு வழக்குச் சொற்களை அவர் கையாளுகின்றார். சாதியின் ஆணிவேர் முற்றும் முழுதாக விட்டுப் போகவில்லை சாதியைப் பற்றி எழுத வேண்டாம் என்று பலர் தடுக்கிறார்கள். இவர்கள் அவரின் எழுத்தில் தங்களைத் தரிசிப்பதைப் பொறுக்கமாட்டாமல் அவ்விதம் தடுக்கிறார்கள்" என்றார்.

இவ்விழாவில் திருவாளர்கள் கே. தங்கவடிவேல், சி. சிவலிங்கராசா, இ. ச. நாகராசா, தேவி பரமலிங்கம், வீ. சின்னத்தம்பி ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். திரு. பொன். பொன்ராசா வரவேற்புரை நிகழ்த்தினார். முதற் பிரதியை சட்டத்தரணி திருமதி. லிங்கா துரைராசா அவர்கள் பெற்றுக் கொண்டார். நாவலாசிரியர் திரு. கே. டானியல் அவர்கள் பதிலுரை ஆற்றினார்

# யாழ்தேவியில் திருடர்கள் கொட்டம் அதிகரிக்கின்றது

(சாவகச்சேரி)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் யாழ் தேவியில் திருடரின் தொல்லை எல்லை மீறியுள்ளது. சில தினங்களுக்கு முன் தனது மகளுடன் கொழும்பிலிருந்து கொடிகாமம் வந்து கொண்டிருந்த வயோதிபர் ஒருவரிடம் இவர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இந்த வயோதிபர் ரயில் சிற்றுண்டிச் சாலையில் காலை உணவுக்கான பலகாரம் வாங்கும் பொழுது தனது சட்டைப் பையிலிருந்த 450 ரூபா அபேஸ் செய்யப்பட்டு விட்டது தெரிந்ததாக அழுதபடி கூறினார்.

ரயிலில் போதியளவு பாதுகாப்பு அதிகாரிகள் இருந்தும் கூட இத்தகைய திருட்டுச் சம்பவங்கள் இடம் பெறுகின்றனவே என்று அந்த வயோதிபர் கண்ணீர் சிந்தியபடி கூறினார்.

## சுன்னாகம் மின்சார சபை

# விநியோகத்தை முற்றாகவே நிறுத்தும் அபாய நிலை?

(நீர்வேலி)

நீர்வேலி கரந்தன் பகுதியில் உள்ள இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான டிரான்ஸ் போமர் ஒன்றில் மட்டுப் படுத்தப் பட்ட மின் விநியோக "கட் அவுட்" போடப் பட்டிருந்தது. இதை அறிந்த சட்ட விரோத மின் பாவனையாளர்கள் டிரான்ஸ் போமர் உள்ள அறையின் கதவை உடைத்து உள்ளே சென்று அதிக மின்வலு தாங்கும் "கட் அவுட்டை" பொருத்தி உள்ளனர். இதனால் டிரான்ஸ் போமரில் இருந்து வெளிவரும் சில வயர்கள் வலுவற்றுள்ளன.

இதை அவதானித்த சுன்னாகம் மின்சாரசபை ஊழியர் டிரான்ஸ் போமரைத் திருத்த முயன்றுமுடியாதுபோய்விட்டதாம். மற்றும் இப்பகுதியில் பல வீடுகளில் சட்ட விரோத மின் பாவனை பெறப்பட்டுள்ளது. நீண்ட தூரம் காவலிடப் படாத கம்பி மூலம் மின் செல்வதால் கம்பியில் உள்ள தடைத்தன்மையால் டிரான்ஸ் போமரிற்கு பாதிப்பு ஏற்படுகிறது.

மற்றும் சட்ட விரோத மின் பாவனையாளர்களை மின்னைத் துண்டிக்க வேண்டும் என மின்சார சபை கூறியும், மின் துண்டிக்கப்படாததாலும், கூடிய வலுவுடைய 'கட் அவுட்' கொண்ட இந்த டிரான்ஸ் போமரை திருத்தும் கருவி தம்மிடம் இல்லாமையினாலும் இப்பகுதிக்கான மின்சாரத்தை முற்றாக துண்டிப்பதைத் தவிர வேறு வழி இல்லை. இதன் காரணமாக மின்சார சபை கடந்த நான்கு நாட்களாக பூரண மின் துண்டிப்பை அமுல் செய்து வருகிறது என சுன்னாகம் மின்சாரசபை ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

## பரு. அரசினர் ஆஸ்பத்திரியின்

# குறைபாடு அறிதல் அவசியம் அபிவிருத்திச்சபை அறிக்கை

[புலோலி]

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை டிசம்பர் மாதம் முதல் வாரத்தை "வைத்தியசாலை அபிவிருத்தி கொடி" வாரமாகப் பிரகடனம் செய்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டாவது பெரிய அரசினர் வைத்தியசாலையாகத் திகழ்ந்து வருவதுடன், பருத்தித்துறை, உடுப்பிட்டி கோப்பாய், சாவகச்சேரித் தேர்தல் தொகுதி மக்களுக்கும் சேவையாற்றி வரும் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியுள்ள வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபை, இக் குறைபாடுகளை நீக்குவதற்காக பொது ஸ்தாபனங்கள், வர்த்தகப் பிரமுகர்களிடமிருந்து நிதி உதவிகளைக் கோரியுள்ளது.

அபிவிருத்திசபை செயலாளர் திரு. எஸ். செந்துரராஜாவினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்குச் சிகிச்சைபெற்றுக்கொள்ள செல்லும் நோயாளிகள் பல்வேறு வகையான குறைபாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது இக்குறைபாடுகளை நீக்கி நோயாளிகளுக்குஉதவி, வைத்தியசாலையின் அபிவிருத்திகளையும் மேற்கொள்ளவேண்டியது முக்கியமானதாகும்.

இதனால் இந்த அபிவிருத்திகளை மேற்கொள்ள பொது ஸ்தாபனங்கள் வர்த்தகப் பிரமுகர்கள் ஆகியோரிடமிருந்து அபிவிருத்திச் சபை நிதிஉதவிகளை எதிர்பார்க்கின்றது.

இவ் வைத்தியசாலை அபிவிருத்திக்கு நிதி உதவி வழங்க விரும்புபவர்கள் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர். எஸ். கணேசநாதனிடம் பணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையில்உள்ள பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலை அபிவிருத்திச்சபையின் நடைமுறைக் கணக்கு இலக்கம் 6292 மூலமாக நன் கொடைகளைச் செலுத்தலாம்.

## சேவைக்காலப் பயிற்சி வகுப்பு

# கிளிநொச்சி ஆசிரியர்க்கு இருபிரிவுகளாக நிகழும்

(பூநகரி)

இரண்டாம் ஆண்டிற்கு 1986ல் கற்பிக்கவிருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்பு இரு பிரிவாக கிளிநொச்சி சென். திரேசா மகளிர் மகா வித்தியாலயத்தில் நான்கு நாட்களும் பூநகரி மகாவித்தியாலயத்தில் நான்கு நாட்களுக்கும் நடைபெறவுள்ளது.

பளை, பூநகரியைச் சேர்ந்த ஆசிரியர்கள் பூநகரியிலும் ஏனைய ஆசிரியர்கள் கிளிநொச்சி சென் திரேசா மவியிலும் இப்பயிற்சியில் பங்கு பற்றுவார்கள். புதிய கல்வித்திட்டம் சம்பந்தமான இப்பயிற்சி வகுப்பை மாவட்ட கல்வி அலுவலக கல்வி அதிகாரி திரு கே. சோமசுந்தரமும், மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டு கொழும்பில் முன்னோடி ஆசிரியர்களாகப்பயிற்சிபெற்ற ஆசிரியர்களான திரு. பொன் தில்லைநாதன், திருமதி. த. தம்பிராசா ஆகியோரும் நடாத்துவார்கள்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

யாழ் நகரில்
எங்கள் கணக்கியல் சேவை
தகுதி வாய்ந்த திறமையான ஆசிரியர் குழுவினால்

| | | | | |
|---|---|---|---|---|
| ICMA | Foundation | Stage | A | 1-12-85 |
| | ,, | ,, | B | 8-12-85 |
| | Professional | ,, | (I) | 8-12-85 |
| | Projessional | ,, | (II) | 8-12-85 |
| | Professional | ,, | (III) | 8-12-85 |
| IAB | Foundation | 1-12-85 | | |
| | Intermediate | 7-12-85 | | |
| | Finals | 7-12-85 | | |
| IAA | Part (i) | 15-12-85 | | |
| | Part (ii) | 15-12-85 | | |
| | Part (iii) | 15-12-85 | | |
| | Part (iv) | 15-12-85 | | |

AAT — Association of Accounting Technicians
ICMA தராதரம் பற்றுதவர்கள், ICMA பயில
இலகுவான London பாடநெறி
Preliminary Exam 8—12—85
Chartered (Local)
Prelim 15—12—85
Licenciate 15—12—85
and Chartered Secretaries Classes —15—12—85

North Ceylon
Technical Institute
14, St. Peters Lane, Hospital Road.
(opp. O. L. R. Church)
JAFFNA. Tele: 24355

## உதய சிந்தனை

நீதிமானை இகழ்ந்துரைக்கும் ஒரு தீயோன் மேலே நிமிர்ந்து பார்த்து வானத்தில் துப்புபவனைப் போன்றவன்.
—கௌதமபுத்தர்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

27-11-85 புதன்கிழமை (குரோதன கார்த்திகை -12)

# முன்னைய வரிசையில் இதுவும் ஒரு புஸ்வாணம்?

நியாயமான, சமாதானமான தீர்வொன்றை எதிர்பார்த்து, அதில் நம்பிக்கை வைத்திருக்கும் தமிழீழக் குழுக்கள், படிப்படியாக அந்த நம்பிக்கையை இழந்து வருவதை, சென்னையிலிருந்து கிடைத்துவரும் அறிக்கைகள் துல்லியமாக விளக்கி வருகின்றன.

கடந்த நான்கு மாதமாக நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடையுமானால், அல்லது எதிர்பார்த்த பயனைத் தராவிடின், சமாதானத்துக்காக தங்கள் உயிரைத் துறப்பதற்குத் தமிழீழப் போராளிகள் தயாராகவிருப்பதாக இந்த அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

நான்கு பிரதான அமைப்புக்களைக் கொண்ட ஈழம் தேசிய விடுதலை முன்னணி தனது இந்த முடிவை, எழுத்து மூலம் இந்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது.

பேச்சுவார்த்தையைத் தொடருவதற்கு ஏதுவாக, தமிழீழக் குழுக்களிடமிருந்து மாற்றுத் திட்டமொன்றை பாரத அரசு எதிர்பார்த்திருந்த வேளையில், தேசிய விடுதலை முன்னணியின் இந்த அறிவிப்பு மத்திய அரசை நிச்சயமாக அதிர்ச்சியடையச் செய்திருக்காது என்றே நாம் நம்புகின்றோம்.

தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்ட போதிலும், சமாதானமான ஒரு தீர்வை மிகமிக நெருக்கடியான இந்தக் கட்டத்திலும் அவர்கள் விரும்பி நிற்கின்றார்கள் என்பதை மத்திய அரசுக்கு இடித்துணர்த்தியிருக்குமாதலால் அதிர்ச்சியை ஏற்படுத்த நியாயமில்லை.

தமிழீழத்தைத் தவிர வேறெந்த மாற்றுத் திட்டத்தையும் சமர்ப்பிக்கத் தாங்கள் தயாரில்லை என்று கூட்டணிச் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் ஏற்கனவே பாரத அரசுக்கு அறிவித்தமையும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியது.

''நியாயத்தைக் காட்டிச் சமாதானத்தைப்பெற முடியாவிட்டால் ஆயுதம் மூலம் அதனைப் பெற முயல்வோம்'' என்றும் தேசிய விடுதலை முன்னணி தனது அறிவிப்பில் சுட்டிக்காட்டியுள்ளது.

அது மட்டுமன்றி, இலங்கை அரசு நியமித்துள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுபற்றி தாங்கள் மறு பரிசீலனை செய்ய எண்ணியுள்ளதான மற்றொரு அறிவிப்பையும் முன்னணி விடுத்துள்ளது.

முன்னணியின் ஆலோசனையின் பேரில்தான் இந்தக்குழு நியமிக்கப்பட்டதாயினும், முன்னணி தெரிவித்த முறையில் இக்குழு நியமிக்கப்படவில்லை என்பதை அனைவரும் அறிவர்.

அரசாங்கத்தின் பிரதிநிதிகளே குழுவில் கூடுதலாகவுள்ளனர். பெரும்பான்மைப் பிரதிநிதிகளே இதில் அநேகம் பேர். ஈழம் தேசிய விடுதலை முன்னணி சமர்ப்பித்த இருபது பேர் கொண்ட பட்டியலிலிருந்து இருவர் மட்டுமே இக்குழுவுக்கு நியமிக்கப்பட்டனர்.

பதினொரு பேரைக்கொண்ட கண்காணிப்புக் குழுவில் மூவர் மட்டும் தமிழர்களாவர். இதனால் இக்குழு நியமனத்தில் 'முன்னணி அதிருப்தியடைந்திருந்த போதிலும், பொறுத்திருந்து பார்ப்போம்' என்று பார்த்திருந்தது.

இந்தக்குழு சரிவர இயங்கவில்லை என்று அறிக்கையொன்றின் மூலம் தெரியப்படுத்தியுள்ள முன்னணி, இதுபற்றி பாரதத் தூதுவர் மூலம் இலங்கை அரசுக்கு கடிதமொன்றினை எழுதியிருப்பதாகவும், பதில் இன்னமும் வரவில்லையெனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறாக சென்னையை மையமாக வைத்து நடைபெற்று வரும் சம்பவங்களைக் கூர்மையாக அவதானிக்கையில், சர்வகட்சி மகாநாடு, திம்பு - டில்லிப் பேச்சுவார்த்தைகள் போலவே கண்காணிப்புக் குழுவும் ஒரு புஸ்வாணமாகி விடுவது போலத் தெரிகின்றது.

காலத்தை இழுத்தடித்து, பிரச்சினைகளின் தாக்கத்தை மழுங்கடிப்பதற்காக அரசு மேற்கொள்ளும் தந்திரோபாயங்களில் இதுவுமொன்று என்பது இப்போது பகிரங்கமாகி வருகின்றது.

அடுத்ததாக என்ன திட்டத்தை மேற்கொள்ள அரசு திட்டமிடுகிறது என்பது அடுத்த சில தினங்களில் தெரிய வரலாம்!

★ புதிய ராணுவ ஆர்வம் திறைசேரியை அரிக்கிறது

# ஊர்காவல் படையினர் உள்ளூர் அரசியலில் மிகுந்த செல்வாக்கு பெற்றவர்கள்

இவை இவ்வாறிருக்க, ஓமான் எனப்படும் மத்திய கிழக்கு அரபு நாட்டினை ஆட்சி புரிபவர் அதன் சுல்தான். அவருடைய, சார்பில் ஒரு போரை வென்று கொடுத்த கே. எம். எஸ். தனது கீர்த்தியைச் செவ்வனே நிலை நாட்டிக் கொண்டது. பிற எதுவித உதவியும் இல்லாமலேயே இவ் வெற்றி கிட்டியது.

'கே. எம். எஸ்.' ஆளணியினர் இலங்கைத் தீவில் உள்ளனர் எனவும் பொலிஸ் கொமான்டோக்களைக் கொண்ட விசேட பணிப்படை ஒன்றை அவர்கள் பயிற்றி வருகின்றனர் எனவும் அமைச்சர் அத்துலத்முதலி ஒத்துக் கொள்கிறார். ஆனால், அதே வேளை, சம்பளம் பேசி அமர்த்தப்பட்டுள்ள பிறர் எவரும் இலங்கை ஆயுதப் படை நடவடிக்கைகள் எவற்றிலும் பங்குபற்றுவதில்லை எனவும் அவர் கூறிவருகிறார். இருந்தாலும், இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளின் வட்டாரங்களில் இக்கூற்று சந்தேகக் கண்ணால் நோக்கப்படுகின்றதும் உண்மை.

'சியா மார் ஷெட்டி' ஜெற்களைச் செலுத்துபவர்கள் சம்பளத்திற்கென இலங்கை அரசினால் அமர்த்தப்பட்டுள்ள இலங்கையரல்லாதோரே என்பது இராஜதந்திர வட்டாரங்கள் நன்கறிந்த விடயமாகும். ஏன் தெரியுமா? அவற்றைக் கையாளும் அளவிற்கு இன்று வரை இலங்கையர் எவராவது பயிற்றப்பெறவில்லை!

இலங்கை கொள்வனவு செய்து வைத்திருக்கும் எட்டு 'சியா மார் ஷெட்டி' ஜெற்களின் விமானிகளும்,அவற்றை இலங்கைக்கு அனுப்பியவர்களாலேயே 'சூதுவாது எதுவுமற்ற' வகையில் இலங்கையரைப் பயிற்றும் நோக்கத்திற்கென அனுப்பப்பட்டவர்கள். இது தான் இலங்கை அரசின் இச்சர்ச்சை பற்றிய நிலைப்பாடு. எப்படியிருக்கிறது விளக்கம்?

ஆயுதப் படையினரின் எண்ணிக்கையிலும் பிரமாண்டமான அதிகரிப்பு உண்டாகி வந்துள்ளதோடு, இலங்கைப் பொலிஸ் படைகளின் பலமும் பாரிய வகையில் மேலும் கூடிக்கொண்டு போகின்றது. இவை எல்லாவற்றையும் விட முக்கியத்துவம் பெறும் விதமாக ஆயுதம் ஏந்திய ஊர்காவற் படைகளும் திரட்டப்பட்டு வருகின்றன. அவர்களை ஊர்காவற் படையினர் எனக் குறிப்பிட்டாலென்ன அல்லது ஜெயவர்த்தன அரசின் கொழும்பிலுள்ள சில கண்டன விமர்சகர்கள் பெயரிட்டிருப்பது போல, ஆயுதம் ஏந்திய சனக் கும்பல்கள் என அழைத்தாலென்ன, சிங்களப் போரார்வத்தின் வாளேந்திய கரம் என ஊர்காவற் படையினைக் கணிக்கலாம்.

> 'இந்தியா ருடே' கட்டுரையின் மொழி பெயர்ப்பு இது. இதன் முதல் நான்கு பாகங்களும் இம்மாதம் 19, 20, 21, 22ம் திகதிய ஈழமுரசு இதழ்களில் வெளியாகின. இது ஐந்தாம் பகுதியாகும்.

ஓங்கி வரும் அவர்களது வலிமையையிட்டு, பாதுகாப்பு அமைச்சு உள்ளடங்கலாக, இலங்கை அரசாங்கத்திலுள்ள பலர் அச்சங் கொண்டு வருகின்றனர்.

அதிகாரியொருவர் இது குறித்துத் தெரிவிப்பது வருமாறு: எம் மனதை அலைக்கழிப்பது, அவர்கள் உருவாகியுள்ளனர் என்பதல்ல. பல்வேறு மாவட்டங்களைப் பிறப்பிடமாகக் கொண்டுள்ள அரசியல் தலைவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் அவர்கள் இருக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் தனியாரின் இராணுவப் படைகளாகக் கூட அவர்களைக் கொள்ளலாம். சீருடை அணிவதிற் பெருமிதம் அடையும் எம் போன்றோர் இத்தகைய இரத்த வெறி பிடித்த சனக் கும்பல்களையிட்டு அச்சம் கொள்கிறோம். அதைவிட மோசமானது என்னவெனில் அவர்களுடைய கட்டுக்கடங்காத் தனம் இராணுவத்திற்கு அவப் பெயரை ஈட்டித்தருவது தான்.

பந்தோபஸ்து அமைச்சர் அத்துலத்முதலி கூட ஊர்காவற்படையினரின் நடத்தையையிட்டு எழும் வினக்களுக்குப் பதிலிறுக்கையில் தற்காப்புப் பாங்கில் நடந்து கொள்கிறார். பாரபட்சமின்றிச் செயலாற்ற நாம் அவர்களைப் பயிற்றியுள்ளோம். ஆனால் அவர்கள் பயிற்சி பெற்ற இராணுவத்தினரைப் போன்றவர்கள் அல்லர் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதனாற்தான், எமது விதிகளின்படி, இரண்டு நிரந்தரப் பொலிசார் அவர்களுடன் கூடச் சென்றால் அல்லாமல், ஊர்காவற் படைக் குழுவின் எவர்களாவது தனித்தியங்கலாகாது என்றிருக்கிறது.

எவ்வாறாயினும், தரைமட்டத்தில் இந்நிலைமை முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது. ஊர்காவற் படையில் உள்ளவர்கள் உள்ளூர் அரசியலில் பிரமாதமான செல்வாக்குப் படைத்தவர்களாக உள்ளனர். இவ்வாறாக, இன்னது செய்தல் வேண்டும்எனப்பொலிசாரிடம் கூறிவைப்பவர்கள் பெரும்பாலும் அவர்கள்தாம்.

நிலைமை எப்படியாக இருப்பினும். அபிவிருத்தியடைந்து வரும் ஜனநாயக சமுதாயமொன்றுக்கு வேண்டியிருப்பது, இந்த அளவு பிரமாண்டமான பிரமாணத்தில் இராணுவமயமாதல் என்று கூறுவதற்கில்லை.

இலங்கை நாட்டிடமுள்ள நிதியோ அரிது, மேலும், இவ்விராணுவமயமாதற்குச் செலவாகும் தொகையோ மிக அதிகம் குறிப்பாகஇக்காரணத்தை முன்னிட்டு, இராணுவமயமாதல் இத்தேசத்திற்கு அறவே உகந்ததல்ல.

நடப்பிலுள்ள ஆண்டுக்குரிய இம் முழு நாட்டினதும் வரவு-செலவுத் திட்டம், சாதாரணமாக இலங்கை ரூ. 1. 6 பில்லியன் செலவினத்தைவிடமேலதிமாகக் காட்டியிருத்தல் வேண்டும். ஆயின், உள்ளபடியாக, அது ஒரு பாரிய குறைபாடு காண்பித்து முடிவுறும். காரணம், மேலதிக பாதுகாப்புச் செலவினத்தின் பொருட்டு ஏழு பில்லியன் இலங்கை ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமையே ஆகும். இலங்கையின் நிதியமைச்சர் றொனிதமெல் கடூரம் தொனிக்காது, இனிமையாக, தமது கருத்தை என் முன் வைத்து எமது அங்கீகாரத்தை, உடன்பாட்டை, வென்றெடுக்கும் சுபாவம் உள்ளவர். அத்தன்மையான அவர்கூட இச் செலவினத்தையிட்டு முறையிட்ட வண்ணமாக இருந்திருக்கிறார்.

அப்படியான அசௌகரிய உணர்வு அவருக்கு ஏற்பட நல்ல காரணம் அவரிடம் உண்டு. இலங்கை காண்பிக்கும் புதிய இராணுவ ஆர்வம் திறைசேரியை அரித்துத் தின்று கொண்டு இருப்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை. கடல் கடந்த பிரதேசங்களில் எமது நிதிவளங்களைக் கூட அது அமுக்கித் திணறவைக்கும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. இஸ்ரேலிய வேவுபார்த்தல் அமைப்புகளுடன் இலங்கை ஆடிய லீலைகளின் விளைவான இழப்பு என்ன தெரியுமா? ஏறக்குறைய ஐந்து கோடி அமெரிக்க டாலர்கள் எமது இந்த உறவாடல்களைக் கண்ணுற்ற சவுதி அரேபியா சினங்கொண்டு இத்தீவிற்கான தனது நிதியுதவிகளை உடனடியாக நிறுத்திக் கொண்டது.

இனி, இலங்கை மேற்கொண்ட உயர் அபிலாசைக்

...5 பக்கம் பார்க்க

# விமானக் கடத்தலுக்கு லிபியாவே காரணம்:

# எகிப்தின் குற்றச்சாட்டு!

(கெய்ரோ)

**மோல்டாவில் திடீர் நடவடிக்கைக்கு இலக்கான எகிப்திய விமானம் கடத்தப்பட்டதற்கு லிபியாவே காரணம் என்று எகிப்து பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியுள்ளது. லிபியா இதற்கு நிதி வழங்கியும், மற்றும் தூண்டுதல் நடவடிக்கை மேற்கொண்டும் பாலஸ்தீன அதிருப்தியாளர்களைக் கொண்டு இக் கோழைத்தனமான செயலைச் செய்துள்ளது என்று எகிப்து தன் குற்றச்சாட்டில் தெரிவித்துள்ளது.**

தாம் கடத்திய விமானம் எகிப்திய துருப்புகளால் தகர்க்கப்படப் போவதை அறிந்த கடத்தல்காரர் குண்டுகளை வீசி அறுபது பயணிகளைக்கொன்று விட்டதாகவும் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

லிபிய எல்லை நெடுகிலும் அவசரகால உத்தரவைப் பிரகடனம் செய்துள்ளதுடன் தன் துருப்புக்களையும் எகிப்து தயார் நிலையில் வைத்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

மோல்டா அரசு எகிப்தின் மேற்படித் தகர்ப்புச் செயலை நியாயப்படுத்தியுள்ளது.

இது ஒரு கண்மூடித்தனமான'' செயல் என்று லிபியா குற்றஞ்சாட்டியுள்ளது.

அமெரிக்காவும், பிரிட்டனும் எகிப்தின் இந்நடவடிக்கையை ஆதரித்துள்ளன.

கிரேக்க பயணிகள் பலர் இவ்விமானத்தில் இருந்தபடியால் எகிப்துக்கு அனுமதி அளிக்குமுன் மோல்டா எம்முடன் கலந்தாலோசித்திருக்கலாம் என்று கிரேக்கம் தெரிவித்துள்ளது.

## தமிழரின் கடை, வீடுகள் தீக்கிரை

(சென்னை)

மட்டக்களப்பில் கடந்த சனிக்கிழமை இராணுவம் சுட்டு எட்டுத் தமிழர் கொல்லப்பட்டதாகவும் தமிழரின் ஐந்து வீடுகளும், எட்டுக் கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டதாகவும் மதுரையில் உள்ள தமிழீழத் தகவல் நிலையத்திற்குத் தகவல் கிடைத்துள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

## சென்னையில் தடையற்ற வர்த்தக வலயம் உண்டாகும்

(புதுடில்லி)

சென்னைக்கருகே தடையற்ற வர்த்தக மண்டலத்தின் முதற் பகுதி ஜனவரியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

சென்னை ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. ஏ. ஜெகதீசன் இதனை புதுடில்லியில் வைத்துத் தெரிவித்தார்

முதல்கட்டம் தொண்ணூற்று இரண்டரை ஹெக்டர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இரண்டாம் கட்டத்துக்கு நூற்று இருபது ஹெக்டர் பரப்பில் அமைக்கப்படும் என்றும் மேலும் அவர் சொன்னார்.

முதலாம் பகுதிக்கு நூற்று இருபத்து ஐந்து மனுக்கள் கிடைத்துள்ளதாகவும் அறுபத்து மூன்று மனுக்களுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் இதில் வெளிநாட்டில் வசிக்கும் பன்னிரண்டு பேரினது மனுக்களும் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## தேசிய விளையாட்டுவிழா: மகாராட்ஷ்டிரம் முதலிடம்

(புதுடில்லி)

புதுடில்லியில் நடைபெறும் தேசிய விளையாட்டுவிழாவில் மகாராஷ்டிரம் முதலிடம் வகிப்பதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

மகாராஷ்டிரத்திற்கு ஐம்பத்து இரண்டு தங்கப்பதக்கங்களும், நாற்பத்து மூன்று வெள்ளிப்பதக்கங்களும், முப்பத்து ஒன்று வெண்கலப்பதக்கங்களும் கிடைத்துள்ளன.

பஞ்சாப் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. இதற்கு முப்பத்து இரண்டு தங்கப் பதக்கங்களும்,இருபத்து எட்டு வெள்ளிப் பதக்கங்களும், முப்பத்து ஐந்து வெண்கலப்பதக்கங்களும் கிடைத்துள்ளன.

மூன்றுமிடம் டில்லிக்குக் கிடைத்துள்ளது. தமிழகத்திற்குப் பன்னிரண்டு தங்கப் பதக்கங்களும், பதினொரு வெள்ளிப் பதக்கங்களும், பதினைந்து வெண்கலப் பதக்கங்களும் கிடைத்துள்ளன.

## இ. கம்யூ. கட்சி கோரிக்கை

(சென்னை)

''ஆசிரியர் பிரச்சினை அரசியல் வேறுபாடின்றி சுமுகமாகத் தீர்த்து வைக்கப்படவேண்டும்'' என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழக மாநிலச் செயலர் திரு. மாணிக்கம் தமிழக அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

பத்து அம்சக்கோரிக்கையை வற்புறுத்தித் தமிழக ஆசிரியர்கள் பல வாரங்களாக வேலை நிறுத்தம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

### ஊர்காவல்....

4ம் பக்கத் தொடர்

குரிய மகாவலி நீர்ப்பாசன திட்டமும் தற்போது இதே காரணத்தை முன்னிட்டு, குடைசயும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. முதன் முதலில், அத்திட்டத்திற் கென ஒதுக்குகற்குப் போதிய பணம் இலங்கை அரசாங்கத்திடம் கிடையாது. இரண்டாவதாக, இதன் பொருட்டுக் கொடை வழங்கத் துணிந்த நாடுகள், விசேடமாக கனடா உட்பட, இப்பொழுது 'துணிந்த பின் எண்ண' தொடங்கியுள்ளன. இத்திட்டத்தின் மனிதாபிமான, சனத் தொகைக் குடியமவு விளைவுகள் அத்தேசங்களின் மனதில் சஞ்சலம் உண்டாக்கத் தலைப்பட்டுள்ளன.

இத்திட்டம் நிறைவேறி வரும் அதே சமயம் குறிப்பாக இத்தீவின் கிழக்குப் பிராந்தியங்களில் விநோதமான ஒரு மீளக் குடியமர்த்தும் திட்டத்தையும் இலங்கை அரசு நிறைவேற்றி வருவதையும் அந்நாடுகள் அவதானிக்கவும் அதனால் கிலேசம் கொள்ளவும் தவறவில்லை.

இலங்கை அரசின் இம் மீளக் குடியமர்த்தும் எத்தனங்களுக்கு, தமிழர் மனதிற் படும் ஒரேயொரு அர்த்தம் இது தான்; இலங்கையின் கிழக்குப் பிரதேசங்கள் பலவற்றில் தமிழர் பெரும்பான்மை இனத்தவராக வாழ்ந்து வந்துள்ளனர். தமிழரின் இப் பெரும்பான்மை அந்தஸ்தை இப்பிரதேசங்களில் மாற்றியமைக்கும் நோக்கத்தை மனதில் வைத்துக் கொண்டு, எண்ணிறந்த பல புதிய சிங்களக்குடியமர்ரகளை நிறுவும் முயற்சியில் அரசாங்கம் இம் மகாவலித்திட்டத்தை ஒரு போர்வையாகக் கொண்டு இயங்குகிறது.

தமிழர்கள் ஐரோப்பாவிலும் கனடாவிலும் பரவலன, நல்ல ஒரு பிரசார ஒழுங்கமைப்பை வைத்திருக்கின்றனர். அதன் பணி பயன்தரும் வகையாக நிறைவேறி வந்துள்ளது இரு வாரங்களுக்கு முன் கனடாவிலுள்ள ஒட்டாவா மாநகருக்கு விஜயம் செய்த இலங்கையின் நிதி அமைச்சர் ரொனி த மெல், கனேடியர்களின் மனதை அரித்துக் கொண்டிருந்த ஐயப்பாடுகளைத் தெளிவாக்க வகையறியாது திண்டாட வேண்டியவரானார்.

(தொடரும்)

போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்
(யாழ்/பெரியாஸ்பத்திரி)

கட்டிட ஆலோசகர்களையும்
அத்துடன் / அல்லது கட்டிட
ஒபபந்தக்காரர்களையும்
பதிவு செய்தல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கட்டிடங்கள் வடிவமைப்புச் செய்தல், கட்டுதல், பராமரித்தல், பிணவறைகள் குளிரூட்டல், நீர்க்குழாய்கள் அமைத்தல், மின்னிணைத்தல், வடிகால் அமைத்தல் என்பனவற்றுக்காக ஆலோசகர்கள் அத்துடன் / அல்லது கட்டிட ஒப்பந்தகாரர்களாகப் பதிவு செய்து கொள்ளுவதற்குத் தகுதியான நிறுவனங்கள் அல்லது தனிப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இவ்வைத்தியசாலை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், வைத்திய கண்காணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ் பாணம், என்ற முகவரிக்கு, 1985ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ம் திகதி மு. ப பத்து மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

3. மேலதிக விபரங்களை, இவ்வைத்தியசாலையில் கணக்காளரிடமிருந்து வழமையான அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி
சி. எஸ். நச்சினார்க்கினியன்
வைத்திய கண்காணிப்பாளர்

போதனா (பொது) வைத்தியசாலை
யாழ்ப்பாணம்,
1985 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 22 ம் திகதி

### இன்று பொன்விழாக் காணும்

## கொழும்புத்துறை முதியோர் இல்லம்

அன்பும் பாசமும் பாதுகாப்பும் இன்றி அநாதைகளாகத் தனிமையிலும், நோயிலும் வாடுகின்ற முதியோருக்கு உதவும் நோக்குடன் 1935ம் ஆண்டு மகாவந். கியோமர் ஆண்டகை அவர்களால் தொடக்கி வைக்கப்பட்ட கொழும்புத்துறை புனித வளனார் முதியோர் இல்லம் தனது ஐம்பதாவது ஆண்டு நிறைவு பொன் விழாவைக் கொண்டாடுகிறது இந்தப் பொன் விழாச் சிறப்பு நிகழ்ச்சியான நன்றித் திருப்பலியை இன்று யாழ்.ஆயர் மகாவந். தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் ஒப்புக் கொடுப்பார்.

யாழ்ப்பாணக் குடா நாட்டிலேயே சிறந்ததொரு முதியோர் இல்லமாக கடந்த ஐம்பது ஆண்டுகள் சேவை செய்து தலை நிமிர்ந்து நிற்கும் புனித வளனார் முதியோர் இல்லத்தின் வரலாறு சிறப்பானதாகும் புத்தர் பகவானின் போதனைகளின் படி புத்த சமயத்தில் வாழ்ந்து பின் கிறிஸ்துவின் போதனைகளால் கவரப்பட்டு கிறிஸ்தவ சமயத்திற்கு மனம் மாறிய திரு, டொன். யோசவ் தம்பதிகளின் அன்பளிப்புத்தான் இந்த இல்லமகும். ஆறு வயோதிப ஆண்களுடன் தொடங்கப்பட்ட இந்த நிலையப் பொறுப்பை ஏற்பதில் 'ஏழைகளின் சிறிய சகோதரிகள்' எனும் கன்னியர் தயக்கம் காட்டியபடியால் திருச்சிலுவைக் கன்னியரின் துணையுடன் 1935ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27ம் திகதி கியோமர் ஆண்டகைஅவர்கள் ஆசீர்வதித்து திறந்து வைத்தார்கள்.

ரூபன்
மரியாம்பிள்ளை

குறுகிய காலத்தில் துரித வளர்ச்சி பெற்ற இந்த இல்லத்தின் வசதிகள் குறைவாக இருந்ததாலும் பொருளாதாரச் சிக்கல்இருந்ததாலும் கன்னியர்கள் உதவிகேட்டு தருமம் கேட்கத் தொடங்கினர்கள். இவ்வாறு பல இடங்களிலும் இருந்து பெற்ற உதவியால் இல்லத்தின் வசதிகள் சில அமைக்கப்பட்டதுடன் கன்னியர்க்கென்றும் தனிப்பட்ட இடம் ஒதுக்கப்பட்டது. இந்த இல்லத்திற்கென்று பலவகையிலும் உதவிய திரு டொன்.யோசவ் தம்பதிகளும் தமக்குப் பிள்ளைகள் இல்லாத படியால் இந்த முதியோர் இல்லத்திலேயே வந்து தங்கினர்கள். 1938ம் ஆண்டு இவர்கள் இருவரும் இறைபதம் அடைந்தனர்.

திருச்சிலுவைக் கன்னியராலேயே தொடர்ந்தும் நடத்தப்படும் இந்த முதியோர் இல்லத்தில் ஆண்கள, பெண்கள் படித்தோர். படியாதோர், வறியவர், ஏழை என்ற வேறுபாடு இன்றி பல முதியோர் அன்புடனும் அனுதாபத்துடனும் கவனத்துடனும் நடத்தப் படுகிறார்கள்.

பொன்விழாக் காணும் இந்த முதியோர் இல்லத்தினூடாக பல முதியோர் கடந்துசென்று விட்டார்கள். இனியும் கவனிப்பார் அற்று அன்பிற்கும்; பாதுகாப்பிற்கும், தனிமையைப் போக்கவும் துடிக்கின்ற அநாதைகளான அல்லது அவர்கள் குடும்பத்திற்கு பாரம் எனத்தள்ளி விடப்படுகின்ற பல முதியோர்க்குச் சேவை செய்ய இந்த இல்லம் நீடூழி வாழ்க என வாழ்த்துவோம.

## க. பொ. த. சாதாரணதரப் பரீட்சை 1985

திருகோணமலை மாவட்டத்திலிருந்து அகதிகளாக இடம்பெயர்ந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்பொழுது வதியும் க. பொ. த. சாதாரணதரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. எம் சிமியாம்பிள்ளை அறிவித்துள்ளார். இவர்களுக்கென பிரத்தியேக பரீட்சை நிலையம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக பரீட்சார்த்திகளை, யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் டிசம்பர் 3ஆம், 4ஆம் திகதிகளில் காலை 9-00 மணிக்குத் தன்னைச் சந்திக்கும்படி கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

ஒப்பம்
யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர்

ஈழமுரசு

## பதினொரு ஏவுகணை விமானங்களை இந்தியா பிரிட்டனிடம் வாங்கும்

(புதுடில்லி)

பாரதக் கடற்படைக்காகப் பிரிட்டனிடமிருந்து பாரதம் பதினொரு ''ஸி-ஹறவியர்'' விமானங்களை வாங்கப் போவதாக ஏஜென்ஸிச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன. அவ்விமானங்களில் அதிநவீன ஏவுகணை வசதிகள் பொருத்தப்படும் என்றும் அச்செய்திகள் மேலும் கூறின. அண்மையில் பிரிட்டன் சென்றிருந்த இந்திய உயர் மட்டக்குழு இவற்றைக் கொள்முதல் செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தது.

ஈழப் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை:

# விடுதலை போராளிகளை முட்டாள்களென எண்ணும் அரசுடன் பேச்சு எதற்காக?

"நாம் எத்தனை எத்தனை இடங்களிலிருந்து முதலாளித்துவ அரச யந்திரங்களைத் தகர்க்கிறோம் என்பதிலேயே கண்ணும் கருத்தும் கொண்டுள்ளோம். நாங்கள் முகமூடிக் கொள்ளையர்களில்லை. ஆனால் புனிதமாயுள்ள எமது மக்களின் இதயங்களைக் கொள்ளை கொண்டவர்கள். நாம் இயக்கங்களிடையே ஊடுருவல் நிகழ்த்தி நிர்மூலமாக்கமாட்டோம்."

இவ்வாறு ஈழம் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி (ஈ ஆர். சி. பி.) வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கையில் மேலும் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசர காலச் சட்டம், இன்னும் ஏதேதோ சட்டங்களை வைத்து இராணுவத் தளங்களை வடக்கு, கிழக்கிலிருந்து வாபஸ் பெறாமல் மக்களை அடக்கி ஒடுக்கப்போகிறது பேரினவாத அரசு. தமிழ் விடுதலைப் போராளிகள் முட்டாள்கள் எனவும் ஈழத் தமிழ் இனம் ஒரு தேசிய இனம் இல்லை என்றும் கூறுபவர்களுடன் இனியும் என்ன கதை வேண்டிக் கிடக்கிறது?

ஈ. ஆர். சி. பீ யின் நோக்கம் தமிழீழம் ஒன்றேதான். நம்மவர் ஆயிரம் பேர் சிறையில், கணக்கற்றோர் கல்லறையில், எண்ணற்றோர் எதிர் காலத்திற்காக எதிர் நீச்சல் போடும் போர்ச் சிங்கங்கள். ஆதலால் சக தோழர்களுடன் சமர் புரிய நேரமில்லை.

ஈ. ஆர். சி. பீ. வறுமை, கல்லாமை, சாதிக் கொடுமை போன்றவற்றிற்கு எதிராக இடி முழக்கம் செய்யும். ஏழை, எளியவர்கள், மற்றும் பாட்டாளி மக்களின் கூட்டாளியாக விளங்கும்.

இப் புனிதமான நடவடிக்கைக்கு இடையூறு செய்யத் தலைபட்டுக் கொண்டிருக்கும் சதிக் கும்பல் தமக்குத் தாமே அழிவைத் தேடிக் கொள்வார்கள்.

## யாழ். மகளிர் அவையினரின் அகதிகள் பிரச்சினை மாநாடு

யாழ். மாவட்ட பகுதிகளுக்குள் இடம் பெயர்ந்து வந்திருக்கும் தமிழ் அகதிகளின் பிரச்சினைகள் மற்றும் இன்றைய நிலை பற்றி ஆராயும் பொருட்டு ஒரு மாநாடு இன்றும், நாளையும், நாளை மறுதினமும் யாழ். வை. எம். சீ. ஏ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மகளிர் அவையினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த மாநாடு தினசரி காலை எட்டு மணி முதல் மாலை மூன்று மணி வரை நடைபெறும். இதில் அகதிகளாக வந்தவர்களை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் அரச அதிகாரிகள், நிவாரண உதவி வழங்குவோர் கருத்துரையாற்றுவார்கள்.

## இன்று

யாழ். புதிய சோனக தெரு ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) சிறுவர் பாடசாலையில் இன்று காலை ஒன்பது மணிக்கு மரம் நாட்டு விழா நடைபெறவுள்ளது. தொழிலதிபர் திரு க. கனகராசாவும் மரங்களை நாட்டி வைப்பார்.

## லட்சார்ச்சனை நாளை ஆரம்பம்

யாழ். கந்தாமடம் பழம் ரோட் ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் லட்சார்ச்சனை நாளை ஆரம்பமாகி அடுத்தமாதம் பதினேழாம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளது. இத்தினங்களில் காலை ஐந்து மணிக்கு அபிஷேகம் நடைபெற்று லட்சார்ச்சனையும், ஆராதனையும் நடைபெறும்.

ஈ. பி. ஆர். எல். எப். அறிக்கை:

## வவுனியா கொலை முன்னணி ஒழுங்கமைப்பை மீறயுள்ளது

வவுனியாவில் தமது இயக்கத் தோழரான றேகன் கொலை செய்யப்பட்டதன் மூலம் ஈழம் தேசிய விடுதலை முன்னணியின் ஒழுக்கமுறை மீறப்பட்டுள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எப் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

இவ் அறிக்கையின் விபரம் வருமாறு;-

வவுனியாவில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர் றேகன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளார். ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கறை படிந்த நிகழ்வுகளின் தொடர்ச்சியாகவே இச்செயலும் அமைந்துள்ளது. சுந்தரம், தேவன், ஜெகன் எனத் தொடர்ந்த பட்டியலில் இன்று நமது தோழன் றேகனும் சேர்க்கப்பட்டுள்ளான். இக்குரூரச் செயல் தாங்கிக்கொள்ள இயலாதது மன்னிக்கமுடியாதது.

இப்படுகொலைக்குப் பின்னர் வழக்கம்போல் நியாயப்படுத்தும் கூக்குரல் சுவரொட்டியாக வெளிவந்துள்ளது. இயக்கப்போராளிகளை திட்டமிட்ட முறையில் படுகொலை செய்துவிட்டு 'சமூகவிரோதி', 'தேசத்துரோகி' எனப் போலி முத்திரை பொறிக்கப்பட்ட வரலாறு ஈழ மக்களின் நினைவை விட்டு அகல முடியாதவை. இன்று கொள்ளைக்காரர்கள், கொலைகாரர்கள் என புதிய வடிவில் இவ் அராஜகச் செயற்பாடுகளை மூடிமறைக்க முயற்சிக்கின்றனர்.

ஈழ தேசிய விடுதலை முன்னணியின் ஒழுங்கு முறைகளை மீறி தான்தோன்றித்தனமான போக்கில் எமது தோழர்களை கைது செய்தனர். இதன் பின்பும் நாம் சமாதான பூர்வமான பேச்சு வார்த்தையினையே மேற்கொண்டோம். இப்பேச்சுவார்த்தையில் நம்பிக்கைக்குரிய எந்த உத்தரவாதங்களையும் தமிழீழ விடுதலைப் புலிகள் எமக்கு வழங்கவில்லை. இந்நிலையில் எமது தோழரை குரூரமான முறையில் படுகொலை செய்து தந்திக்கம்பத்தில்கட்டியுள்ளனர். இதன் மூலம் ஈழ தேசிய விடுதலை முன்னணிக்குள் உள்ள இயக்கங்களில், ஒன்றின் உறுப்பினர்களை ஏனைய இயக்கங்கள் கைது செய்யக் கூடாதெனவும் தவிர்க்க முடியாமல் அவ்வாறு கைது செய்யும் பட்சத்தில் காரணங்களை விளக்கி உரியவர்களிடத்தில் கையளிக்க வேண்டுமென்ற ஈழ தேசிய விடுதலை முன்னணியின் கட்டுப்பாட்டை வேண்டுமென்றே மீறியுள்ளனர்.

மக்கள் மீதும் போராட்டத்தின் மீதும் எமக்குள்ள பொறுப்புணர்வை எமது இயலாமையாக புலிகள் கருதுவது போராட்டத்தின் நலன்களுக்கு உகந்தவையல்ல. தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தங்கள் விரும்பத்தகாத விளைவுகளையே ஏற்படுத்தும். போராளிகளின் சமாதியின் மேல் ஓர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவது எந்த வகையிலும் சாத்தியமானதல்ல. நெருக்கடி மிகுந்த இன்றைய போராட்ட சூழ்நிலையில் ஐக்கியத்தின் அவசியத்தையும் அதற்குரிய பண்புகளையும் சம்பந்தப்பட்டவர்கள் கொண்டிருக்க வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றோம்.

## வாங்குப் பெட்டி....

கொண்டு பேசினார்.

யாழ்பாணத்தில் நடைபெற்ற மாவட்ட சபைத் தேர்தல் பற்றிக் குறிப்பிட்ட திரு. முனசிங்ஹா, இந்தத் தேர்தலின் போது திடீரென சில தேர்தல் அதிகாரிகள் மாற்றம் செய்யப்பட்டனர். புதிதாக சிலர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவைகளைப் பற்றி தேர்தல் ஆணையாளர் பூரண அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

## இன்று அகதிகள்....

ளால் இடம்பெயர்ந்து அகதிகளாக வந்தவர்களின் ஊர்வலம் யாழ்நகரில் இன்று காலை தமிழ் மகளிர் அவையின் ஆதரவுடன் நடைபெறுகிறது.

காலை எட்டு மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோவிலடியிலிருந்து ஆரம்பமாகும் இவ் ஊர்வலம், பாஷையூர் அந்தோனியார் ஆலயத்திற்குச் சென்று அங்கிருந்து யாழ். வை. எம் சி. ஏ. மண்டபத்தைச் சென்றடையும்.

## வடகிழக்கு ...

நினைக்கின்றீரா என்று உங்களால் ஏதாவது கூறமுடியுமா என்று அமைச்சரிடம் கேட்டபோது, 'நான் செய்யவேண்டியதெல்லாம் செய்து விட்டேன்; இதுக்குமேல் என்ன செய்யலாம்'' என்று தான் ஜனாதிபதி சொல்லுகிறார் என அவர் பதிலளித்தார்.

ஆனால் இதனை தமிழ் மக்களால் ஏறகமுடியாதென்று அமைச்சர் சொன்னார். இந்த தமிழீழ விடுதலைக்குழுக்கள் தமது கருத்து வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு நின்று குரல் எழுப்பவேண்டும். தமிழகம் தொடர்ந்து மத்திய அரசை நெருக்கவேண்டும். அந்த நெருக்கடியினால் மத்திய அரசு வடக்கு கிழகக்கு இணைந்த அமைப்பை சிபாரசு செய்தால், வேறுவழியின்றி அதற்கு இசைவு தெரிவிக்கும் நிலைமை உருவாகலாமென்று மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தொண்டமான் சொன்னார்.

மலையக மக்கள் பிரஜாவுரிமை பிரச்சினைக்கு இவ்வருட இறுதிக்குள் தீர்வு கிடைக்காவிடின் இ.தொ.கா. தலைமைத்துவத்தைத் துறக்கத்தாம் முன்வந்திருப்பதாகவும் அவர் சொன்னார். இதற்கும் அமைச்சர் பதவிக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாதெனவும் அவர் விளக்கினார்.

## நாலு கொழும்பு...

தாமல் செல்லவே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

லொறியிலிருந்த பொருட்கள் பின்னர் கொள்ளையடிக்கப்பட்டனவாம்.

## புதிய உணவு முத்

சட்ட வேலைகளினால் இந்தப் புதிய முத்திரை விநியோகத்தில் சிறிது தாமதம ஏற்படலாம் என்றும் பொது மக்கள் இதற்காக உதவி அரசாங்க அதிபர்கள் பணிமனைக்கும, கச்சேரிக்கும் வந்து சிரமப்படத் தேவையில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## குருமார்களின்...

மார்களின் கூட்டம் கொழும்பு அத்தியட்சகரின் பேராலயத்தில் இன்றும் நாளையும் நடைபெறவிருக்கின்றது கொழும்பு திருமண்டலப் பேராயர் பேரருட்திரு. சுவிதீன் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு, மத்திய மலைநாட்டுப் பகுதிகளில் பணிபுரியும் அங்கிலிக்கன் திருச்சபைகளின் குருமார்களும், அப்பகுதிகளைச் சேர்ந்த ஆர்ச்டீக்கனமார்களும் கலந்து கொள்வார்கள்.

## இன்று...

னெட்டு நாட்களாகின்றன. இன்னமும் இது திருத்தப்படவில்லை. வாசகர்கள் 'ஈழமுரசு' அலுவலகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்து ஏமாற்றமடைவதைத் தவிர்ப்பதற்காகவே இதனை அறியத் தருகின்றோம்.

## மூன்று கப்பல்...

இரண்டாயிரம் தொன் அரிசி கொண்டுவரப்படவுள்ளது

இதனால் வடபகுதியில் எந்த உணவுப் பொருட்களுக்கும் எந்தவித தட்டுப்பாடும் ஏற்படாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாலர் பாடசாலை கைப்பணி

(நல்லூர்)

நல்லூர் பரி. யாக்கோபு ஆலய பாலர் பாடசாலைப் பிள்ளைகளின் வருடாந்த கைப்பணி காட்சி இன்று புதன் கிழமை பரி. யாக்கோபுதேவாலய ஜெபமண்டபத்தில் காலை முதல் மத்தியானம் வரை நடைபெறும்.

கைப்பணிக் காட்சிக்கான ஏற்பாடுகளை பாலர்பாடசாலை ஆசிரியைகளும், பாலர் பாடசாலை நிர்வாகப் பொறுப்பாளர்களான திருமதி யே. விஷயநாதனும், திரு. ஐ ஆர். அரியரத்தினமும் செய்துள்ளனர்.

## நால்வர் சித்தி

கந்தரோடைத் தமிழ்க் கந்தையா வித்தியாசாலையைச் சேர்ந்த சி. சாயீஸ்வரன், யோ. நிர்மலன், து. சுதர்சன், செ. சிவானந்தன் ஆகியோர் ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசிற் பரீட்சையிற் சித்தியடைந்துள்ளனர்.

## மரண அறிவித்தல்

### இரத்தினம் அமிர்தலிங்கம்

(ஆசிரியர் துரையப்பா மகாவித்தியாலயம்)

காலமாகிவிட்டார். இவர் இரத்தினம் சின்னபூரணம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும், மஞ்சுளாவின் அன்புக் கணவரும், அமுதா, பிரதீபன் அவர்களின் அன்புத் தந்தையும், தர்மரத்தினம் (யாழ். விலைமதிப்பீட்டுத்திணைக்களம்), சுந்தரலிங்கம் அவர்களின் அருமைச் சகோதரரும், காலம் சென்ற பரமசாமி, நேசமலர் தம்பதிகளின் மருமகனுமாவர். ஈமக் கிரியைகள் இன்று புதன்கிழமை மாலை 3-00 மணிக்கு 30/2, நிக்கலஸ் லேன், கச்சேரி நல்லூர் ரோட், அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரிகைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 27-11-1985 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336